## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 2-7 - கேசவன்தமர்
## (எம்பெருமானது திருவருளால் தமது ஏழேழ் தலைமுறையோரும் பெருமை பெற்றார் எனல் - பன்னிருநாமப் பாட்டு)

2851 * கேசவன் தமர் * கீழ்மேல் எமர் ஏழெழு பிறப்பும் *
மாசதிரிது பெற்று * நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா! **
ஈசன் என் கருமாணிக்கம் என் செங்கோலக் கண்ணன் * விண்ணோர்
நாயகன் * எம்பிரான் எம்மான் * நாராயணனாலே 1

2852 நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன் * வேதமயன் *
காரணம் கிரிசை * கருமம் இவை முதல்வன் எந்தை **
சீரணங்கமரர் பிறர் பலரும் * தொழுதேத்த நின்று *
வாரணத்தை மருப்பொசித்த பிரான் * என் மாதவனே 2

2853 மாதவன் என்றதே கொண்டு * என்னை இனி இப்பால் பட்டது *
யாதவங்களும் சேர்கொடேன் என்று * என்னுள் புகுந்திருந்து **
தீதவம் கெடுக்கும் அமுதம் * செந்தாமரைக்கண் குன்றம் *
கோதவமில் என் கன்னற்கட்டி * எம்மான் என் கோவிந்தனே 3

2854 கோவிந்தன் குடக்கூத்தன் * கோவலன் என்றென்றே குனித்து *
தேவும் தன்னையும் * பாடியாடத் திருத்தி ** என்னைக் கொண்டு என்
பாவந்தன்னையும் * பாறக்கைத்து எமர் ஏழெழு பிறப்பும் *
மேவும் தன்மையமாக்கினான் * வல்லன் எம்பிரான் விட்டுவே 4

2855 விட்டிலங்கு செஞ்சோதித் * தாமரை பாதம் கைகள் கண்கள் *
விட்டிலங்கு கருஞ்சுடர் * மலையே திருவுடம்பு **
விட்டிலங்கு மதியம் சீர் * சங்கு சக்கரம் பரிதி *
விட்டிலங்கு முடியம்மான் * மதுசூதனன் தனக்கே 5

2856 மதுசூதனையன்றி மற்றிலேன் என்று * எத்தாலும் கருமம் இன்றி *
துதி சூழ்ந்த பாடல்கள் * பாடியாட நின்று ஊழியூழி தொறும் **
எதிர் சூழல் புக்கு எனைத்தோர் பிறப்பும் * எனக்கே அருள்கள் செய்ய *
விதி சூழ்ந்ததால் எனக்கேல் அம்மான் * திரிவிக்கிரமனையே 6

2857 திரிவிக்கிரமன் செந்தாமரைக்கண் * எம்மான் என் செங்கனிவாய் *
உருவில் பொலிந்த வெள்ளைப் பளிங்கு * நிறத்தனன்[1] என்றென்று ** உள்ளிப்
பரவிப் பணிந்து * பல்லூழியூழி நின் பாத பங்கயமே *
மருவித் தொழும் மனமே தந்தாய் * வல்லை காண் என் வாமனனே 7

2858 வாமனன் என் மரதக வண்ணன்! * தாமரைக் கண்ணினன்!

---

[1] நிறத்தன்

காமனைப் பயந்தாய்! * என்றென்று உன் கழல் பாடியே பணிந்து **
தூமனத்தனனாய்ப் * பிறவித் துழதி நீங்க * என்னைத்
தீமனம் கெடுத்தாய் * உனக்கு என் செய்கேன்? என் சிரீதரனே! 8

2859 சிரீஇதரன் செய்ய தாமரைக் கண்ணன் * என்றென்று இராப்பகல் வாய்
வெரீஇ * அலமந்து கண்கள் நீர்மல்கி * வெவ்வுயிர்த்துயிர்த்து **
மரீஇய தீவினை மாள இன்பம் வளர * வைகல் வைகல்
இரீஇ * உன்னை என்னுள் வைத்தனை * என் இருடீகேசனே! 9

2860 இருடீகேசன் எம்பிரான் * இலங்கை அரக்கர் குலம் *
முருடு தீர்த்த பிரான் எம்மான் * அமரர் பெம்மான் என்றென்று **
தெருடியாகில் நெஞ்சே! வணங்கு * திண்ணம் அறிஅறிந்து *
மருடியேலும் விடேல் கண்டாய் * நம்பி பற்பநாபனையே 10

2861 பற்பநாபன் உயர்வற உயரும் * பெருந்திறலோன் *
எற்பரன் என்னையாக்கிக் கொண்டு * எனக்கே தன்னைத் தந்த
கற்பகம் ** என் அமுதம் கார்முகில் போலும் * வேங்கட நல்
வெற்பன் * விசும்போர் பிரான் * எந்தை தாமோதரனே 11

2862 தாமோதரனைத் தனி முதல்வனை * ஞாலம் உண்டவனை *
ஆமோதரமறிய * ஒருவர்க்கென்றெ தொழுமவர்கள் **
தாமோதரன் உருவாகிய * சிவற்கும் திசைமுகற்கும் *
ஆமோதரமறிய? * எம்மானை என் ஆழிவண்ணனையே 12

2863 * வண்ண மாமணிச் சோதியை * அமரர் தலைமகனை *
கண்ணனை நெடுமாலைத் * தென்குருகூர்ச் சடகோபன் **
பண்ணிய தமிழ் மாலை * ஆயிரத்துள் இவை பன்னிரண்டும் *
பண்ணில் பன்னிருநாமப் பாட்டு * அண்ணல் தாள் அணைவிக்குமே 13

**அடிவரவு:** கேசவன் நாரணன் மாதவன் கோவிந்தன் விட்டிலங்கு
மதுசூதன் திரிவிக்கிரமன் வாமனன் சிரீதரன் இருடீகேசன்
பற்பநாபன் தாமோதரன் வண்ணம் அணைவது